From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2014

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வபிரசாத் | Father/Husband Name | : சிவலிங்கம் |
| Age | : | Calling | : |
| Date | : 08.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தாமரைப்பட்டியில் குடியிருந்து கொண்டு, சென்னையில் நான் சேல்ஸ் மேனாக வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 கரிகாலனை எனக்கு தெரியும், அவர் தற்போது இறந்துவிட்டார். மற்ற பட்டியல் சாட்சிகளை 2003 முதல் 2006 மேலூர் அரசு கலைகல்லூரியில் படித்து வகையில் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும், மற்ற எதிரிகளையும் தெரியும். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரிகளும் அதே கால கட்டத்தில் எங்கள் கல்லூரியில் படித்தவர்கள்.

11.02.2005 ம் தேதி நான் மேலூர் அரசு கலை கல்லூரியில் இரண்டாம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு படித்துக்கொண்டு இருந்தேன். அன்றைய தினம் மாலை 04.00 மணியளவில் 5000 மீட்டர் ஒட்டப்பந்தய போட்டி நடைபெற்றது, அதன் பின்னர் சுந்தரபாண்டி, ஆஜர் எதிரியின் நண்பர்கள் பெயர் நினைவில் இல்லை, மற்றும் பட்டியல் சாட்சிகளில் உள்ளவர்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. அதன்பின்னர், மறுநாள் காலை 10.00 மணிக்கு நான் கல்லூரிக்கு சென்றபோது அங்கு கல்லூரி முந்தைய தினம் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக கல்லூரி விடுமுறை அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் நான் எனது கல்லூரியின் வழியாக

பேருந்து நிலையம் செல்வதற்கு சென்றேன். சுந்தரபாண்டி, கரிகாலன், தினேஷ், பிரதிவிராஜ், முருகன், ஆகியோர்களை ராஜேந்திரபிரசாத், பழனிச்சாமி, மற்றும் வேறு நபர்கள் பெயர் ஞாபகம் இல்லை, மேற்கூறியவர்களை அடித்தார்கள். எதிரிகள் கம்பி, கத்தி, அருவாள் கொண்டு அடித்ததனால் சுந்தரபாண்டி, கரிகாலன், தினேஷ், பிரதிவிராஜ், முருகன் ஆகியோர்களுக்கு கை, கழுத்து ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அதன்பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் நானும், சுப்பிரமணியும், அங்கிருந்தவர்களும் காயம்பட்டவர்களை மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் மேலூர் அரசு கலை கல்லூரியில் படித்ததற்கான ஆதாரம் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேலூர் அரசு கலை கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்றால் அதன் பிரதான நுழைவு வாயில் திருச்சி - மதுரை தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவ தேதிக்கு முந்தைய தினமே நானும், எங்கள் தரப்பினர்களும் மகேந்திரன் என்பவரை நாங்கள் அடித்து தாக்கியதாக அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் எங்கள் மீது தாழ்த்தப்பட்ட வன்கொடுகை தடுப்பு சட்டத்தின்கீழ் குற்ற எண் 245/2005 ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினம் நான் எத்தனை மணிக்கு கல்லூரிக்கு சென்றேன் என்றால் காலை 10.00 மணி. நான் கல்லூரியின் நுழைவு வாயில் வழியாக சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் எதிரிகளின் தரப்பினர்களை அடித்து மகேந்திரன் என்பவர் உயிருக்கு போராடிக்கொண்டிருந்ததால் அவர்கள்

தரப்பினர் எங்களை கைது செய்யகோரி உள்ளிருப்பு போராட்டம் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நான் கல்லூரிக்குள் நுழைந்தபோது கல்லூரி கால வரையறையற்ற விடுமுறை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2) நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட ஆயுதங்களை யார், யார் பயன்படுத்தி யாரை தாக்கினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். அதேபோல் நான் எனது ஊரான தாமரைபட்டி செல்வதற்கு கல்லூரியின் மைதானத்தின் மேற்குபுறமாக செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான், பேருந்து நிறுத்தத்திற்கு வருவதற்காக அந்த வழியாக வந்தேன். அதேபோல் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் எனக்கு எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களை நான் மருத்துவமனையில் சேர்த்தேனா என்றால் நானும், மற்ற நபர்களும் மருத்துவமனையில் சென்று சேர்த்துவிட்டேன்,

3) எந்த வாகனத்தில் காயம்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் 108 ஆம்புலன்ஸ் மூலம் சேர்த்தோம். அப்போது காயம்பட்டவர்கள் சுயநினைவில் இருந்தார்களா என்றால் பேசும் நிலையில் இருந்தார்கள். அவர்களை மருத்துவர் விசாரித்தபோது அவர்களே நடந்த விவரத்தை கூறினார்களா என்றால் ஆம்.

4) நான் எவ்வளவு நேரம் காயம்பட்ட நபர்களுடன் இருந்தேன் என்றால் அன்று பகல் முழுவதும் அவர்களுடன் இருந்துவிட்டு, இரவு வீட்டிற்கு சென்றுவிட்டேன். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் மீது போடப்பட்ட வழக்கில் எதிரி தரப்பினரும், நாங்களும் கல்லூரி மாணவர்கள் என்ற முறையில் சமரசமாக சென்றுவிட்டோம் என்பதனால் இந்த வழக்கில்

இருந்து விடுதலை செய்யப்பட்டோம் என்றால் சரிதான்.